R 5966(4506&3204)

# மெலிதாவில் கப்பல் கவிழ்ந்தது
# SHIPWRECKED ON MELITA

ஆதார வசனங்கள் : அப்போஸ்தலர் 27:27; 28:11–31

பலதரப்பட்ட நிலைப்பாடுகளின்படி பார்க்கும்போதும், கற்கும்போதும், பரிசுத்த பவுல் குருட்டு பிடிவாதத்தால் துன்புறுத்துகின்றவரும், தன் பாவத்துக்காக மனம்வருந்துகிற தாழ்ச்சியுடையவருமாக இருந்து; "கர்த்தாவே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் ?" தைரியமுள்ள சாட்சியாக இருக்கிறார். வெளிநாடுகளில் சென்று சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்போது, சுயத்தை என்று கதறுகிறார்.இப்படி தம் சொந்த ஜனங்களிடையே ஒரு பலிசெலுத்தும் ஊழியனாக காணப்படுகிறார். அவர்கள் முன்பாகவும் உயரிய பண்புடையோர் மத்தியிலும் பெரும் கூட்டத்தார் மத்தியிலும் இவரது நடக்கையை நாம் கவனித்திருக்கிறோம். ஒரு சிறைக்கைதியாக ரோமாபுரிக்கு தொலைதூர கடற்பிரயாணம் மேற்கொள்ளும்போது, அபாயம் சூழ்ந்திருக்கும்வேளையில் தைரியத்தோடு காணப்பட்டார். மனிதரிடையே தன் வாழ்க்கை கடமைகளை செய்கிற மனிதனாகவும், கப்பல் கவிழ்ந்து பெரும் பேரிடர் ஏற்பட்டதன் மத்தியிலும், இன்றைக்கு நாம் அவரை கண்ணோக்குகிறோம். இயேசுவை பின்பற்றுகிறவராக ஆனபிறகு, அவர் நடந்துகொள்ளும் பாங்கு – நேரிய தன்மையுடையவராயும், தாழ்மையுள்ளவராயும்,தேவபக்தி உள்ளவராயும், அர்ப்பணித்தவராயும், பரிசுத்தவானாயும் இருந்தார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பின்னடியார்களால் உயர்வாக கருதப்பட தகுதிபெற்றவராக பவுல் இருக்கிறார். கேட்கும் காதுகளை பெற்ற, சுவிசேஷசெய்தியை தங்கள் நல்ல நேரியதான இருதயத்தில் பெற்றிருக்கிற அனைவரும், பரிசுத்தபவுல் அடைந்த மறுரூபமடைதலை அடையமுடியும். அப்படிப்பட்ட மறுரூபமாகுதல், வேதாகமத்தின் உண்மையான பக்திக்கும், தேவவல்லமைக்குமான சாட்சியமாய் இருக்கும். முழு மனுக்குலமும் அப்படிப்பட்ட மறுரூபமாகுதலுக்குட்பட்டால் எப்பேர்ப்பட்ட மாற்றமடைந்த உலகத்தில் நாம் இருப்போம்! ஆனால் சுவிசேஷத்தால் ஈர்க்கப்படும் எல்லோரும் அப்படிப்பட்ட ஆதிக்கத்தினால் உண்டாகும் இருதயநிலைமையை அடையமாட்டார்கள். சிலர்க்கு மேசியாவின் பலமுள்ள புயம் தேவைப்படுகிறது, இவர்களுக்கு ஆயிரவருட ராஜ்யத்தின் உந்து சக்தியும் அதிகாரமும் தேவையாக இருந்து, தவற்றின்மேல் நியாயத்தின் அனுகூலங்களை அவர்களுக்குக் காண்பித்து, அவர்களை கீழ்ப்படுத்தும். "உமது இராஜ்யம் வருக, உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூலோகத்திலும் செய்யப்படுக" என்று நாம் விசுவாசத்துடன் ஜெபித்து தேவனுக்கு நன்றிகூறுவோம்.

பதினான்கு நாட்கள் இரவும் பகலும் கடலில் நேராக சென்றுகொண்டிருந்த பரிசுத்த பவுலும் மற்றும் கப்பலில் பிரயாணம்செய்த 276ஆத்துமாக்களும், திடீரென்று ஏற்பட்ட பயங்கர புயலால் இரவில், கப்பல் திசைமாறி இழுத்துச் செல்லப்பட்டனர். நுரைகளின் சத்தத்தால் ஆட்கொள்ளப்பட்ட கடற்பிரயாணிகள், தாங்கள் எவ்விடத்தில் இருக்கிறோம் என்று கண்டுகொள்ள முடியாதிருந்தனர். கப்பலை நான்கு நங்கூரங்கள்கொண்டு நிலைநிறுத்தி, காலைவிடியும்வரை காத்திருந்தனர். யூத சிறைக்கைதியாகிய பரிசுத்த பவுல், இந்நேரத்தில் கப்பலில்இருந்த அனைவரது மதிப்பீட்டிலும் உயர்ந்திருந்தார். ஏனெனில் "தேவன் அவரோடு இருந்தார்". புயலின் கொந்தளிப்பால் எல்லோரும் தைரியத்தையும் நம்பிக்கையையும் இழந்திருந்தனர். ஆனால் இவரோ, தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்திருந்தபடியாலும், ரோமாபுரியில் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவேண்டும் என்று கர்த்தர் தரிசனத்தில் காண்பித்திருந்தபடியாலும் தைரியத்தோடு காணப்பட்டார். பவுலின் நிமித்தமாக தெய்வீக பராமரிப்பு கப்பலிலிருந்த ஒவ்வொருவரையும் பாதுகாத்தது. அவரது வசனத்தின் மூலமாக அறிவுறுத்தப்பட்டு, தேவனோடு சமாதானத்திற்குள் இருக்கும் இருதயம் மகிழ்ச்சி அல்லது துக்கம் என்னவந்தாலும் ஆயத்தமாகவே இருக்கும். சோர்வடைந்த தம் உடன் பயணிகளை ஆறுதல்அளித்து, உற்சாகப்படுத்தி, அப்போஸ்தலர் புத்திமதிகூறினார். தாம் கண்ட தரிசனத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி, தனக்கு முழுமையான விசுவாசம் உண்டாயிருப்பதை அவர்களுக்கு நிச்சயப்படுத்தினார். வரும் நாளில் கடும் முயற்சிமேற்கொள்ள ஆற்றல் தேவைப்படுவதால் அவர்கள் உணவருந்தி பலப்பட அவர்களை வற்புறுத்தினார்.

அவரது உற்சாகமூட்டுதலும் முன்மாதிரிகையும் உடனடியாக மற்றவர்களை பற்றிக்கொண்டன. பவுலின் மகிழ்ச்சிக்கும் சமாதானத்துக்கும் கர்த்தரின் வெளிச்சமே காரணமாயிருந்ததால், அவ்வெளிச்சத்தையே கப்பலில் இருந்தோரை தேற்றுவதற்கென வெளிப்படுத்தினார். தேவனுடைய ஜனங்கள் தங்களுக்கு கிடைக்கும் சமயத்திற்கேற்ப எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசவீட்டாருக்கும் நன்மை செய்யவேண்டும் என்று தனக்கு போதிக்கப்பட்டவற்றையே அவர் விளக்கிக் காண்பித்தார். அவர் தம் சொந்த வார்த்தைகளை உதாரணங்களோடு விளக்குகையில்; "தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்".

காலைவெளிச்சம் வெளிப்பட்டதைக்கொண்டு ஒரு சிறுவளைகுடாவில கப்பல் நிலைகொண்டிருப்பதை அவர்கள் அறிந்துகொண்டனர். இந்த வளைகுடா அன்றையநாளில் மெலித்தா தீவு எனப்பட்டது. தற்போது மால்தா தீவு என்று அழைக்கப்படுகிறது. இந்தவளைகுடா பரிசுத்தபவுலின் வளைகுடா என்றும் அழைக்கப்படுகிறது. கப்பல் மாலுமி, தன் நங்கூரங்களின் கட்டுக்களை அவிழ்த்து, கப்பலை மேல்மட்டத்துக்கு உயர்த்தி கடற்கரைக்கு கொண்டுசெல்ல முயன்றார். இரண்டு கடல்களின் நீரோட்டங்கள் சந்திக்கும் இடமாக அது இருந்ததாலும், கப்பலின் முன்பகுதி சேற்றுக்குள் புதைந்திருந்ததாலும், முன்பகுதி இறுகப்பற்றிருந்தது. பின்பகுதியோ அலைகளின் தாக்குதலால் சுக்குநூறாக உடைந்தது. கப்பல் பிரயாணிகள் கப்பலை தனித்துவிட்டுவிட முயற்சித்ததால், அபாயத்திலிருப்போரை மீட்கும் சிறுபடகின்மூலம் மிதக்கும்படி செய்யப்பட்டது. கப்பலை நிலப்பகுதிக்கு கொண்டுவர

கடல் மனுஷருக்கு அவசியம்நேரிட்டபடியால், பரிசுத்த பவுலே இவ்வழிமுறையை ஆலோசனையாகத் தந்தார். தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மேல் தாம் கொண்டிருந்த நம்பிக்கை அவரை, பூமிக்குரியவைகளை முறையாக உபயோகிப்பதைப் பொருத்தமட்டில் அலட்சியமாக இருக்க அவரை நடத்தவில்லை. தேவனுடைய பிள்ளைகளுக்கு இங்கே ஒரு பாடம் உண்டு. நாம்ஜெபித்து அவர்பேரில் நம்பிக்கையாய் இருக்கும்போது, அசட்டை மனப்பான்மைக்கு இடம் கொடுக்கக்கூடாது.

கப்பல் கவிழ்ந்து சிதறுண்டநிலையில், நீச்சல்அடித்தல் அல்லது மிதத்தல் மூலமாகவே கரையை அடையமுடியும்என்று கண்டபிறகு, சிறைக்கைதிகளை கொல்ல படைவீரர்கள் தீர்மானித்திருந்தனர். ஏனெனில் ரோம சட்டப்படி சிறைக்கைதிகளை பாதுகாக்க தாங்களே பொறுப்பாளிகளாக, தங்கள் உயிரையே அதற்காக கொடுக்கவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் நூற்றுக்கதிபதியோ அப்போஸ்தலர் கூறிய வார்த்தைகள்பேரில் உயர்ந்த மதிப்பை வைக்க கற்றிருந்தான். பவுல்அப்போஸ்தலரின் நிமித்தமாக எல்லா சிறைக்கைதிகளும் காக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை அவன் உணர்ந்தான். அவர் தான் கண்ட தரிசனத்தை கூறியது, எல்லோருக்கும் எழுச்சியூட்டினது, நம்பிக்கையையும், தைரியத்தையும் கொண்டுவந்தது. அதோடு, தாங்கள் பாதுகாப்பாய் இருப்பதாகவும் கருதினார்கள். பரிசுத்த பவுல் முன்னுரைத்திருந்தவாறு, ஒவ்வொரு மனித ஜீவியமும் காக்கப்பட்டது, கப்பல் மட்டுமே அதன் சரக்குகளோடு அழிவுக்குள்ளானது.

கடற்கரையை அடைந்தவுடன் அப்போஸ்தலரைப்பற்றி ஒரு புதிய தோற்றத்தை நாம் காண்கிறோம். அவர் கௌரவத்திற்காகவோ அல்லது இவரை மேலானவரென்று கருதி எல்லோரும் இவருக்கு ஊழியம்செய்யவேண்டும் என்ற மனநிலையில் நிற்காமல், கப்பற் பிரயாணிகள் அனைவரின் நலனுக்காக தாமதமின்றி உதவிசெய்தார். கப்பற்பிரயாணிகள் குளிர்காயவும் வெதுவெதுப்பாய்இருக்கவும் அவர் நெருப்புமூட்ட விறகுக்குச்சிகளை சேகரித்ததாக நாம் காண்கிறோம். அத்தீவிலிருந்த நாகரீகமற்றவர்கள்(அவ்வாறே அழைக்கப்படமுடியும். ஏனெனில் இவர்கள் கிரேக்கம் பேசவில்லை, அவர்கள் ஆப்பிரிக்க–ஆசிய இனக்குழுவைச் சார்ந்தவர்கள்) அவர்களுக்கு பலவகைகளில் உதவிசெய்தனர். ஆனால் நெருப்புமூட்டி குளிர்காய்ந்து கொண்டிருக்கையில், ஒரு நச்சுப்பாம்பு அப்போஸ்தலரது

கரங்களை சுற்றிக்கொண்டது. அதை அவர்கள் கண்டபொழுது, இந்த சிறைக்கைதி சந்தேகத்திற்கிடமின்றி ஒரு கொலைகாரனாக இருக்கக்கூடும் என்று கருதினர். கப்பல் கவிழ்ந்த கொடிய துன்பத்திலிருந்து தப்பிப் பிழைத்தாலும், நீதி அவனைத் தொடர்ந்து, பாம்பினால் கடிக்கப்படும்படியும் அதனால் அவன் மரிக்கவும் காரணமாயிற்று என்று அவர்கள் எண்ணினர். கடிபட்ட கையானது பாம்பின் விஷத்தினால் விரைவில் வீங்கக்கண்டு, பரிசுத்தபவுல் வலியின் வேதனையால் துடித்து மரிக்கப்போகிறார் என்று எண்ணினர். ஆனால் பவுலோ, தன் கையை உதறி, பாம்பை கீழே விழத்தள்ளி எந்த காயமுமின்றி தப்பித்ததால், அவர் ஒரு தேவனாக இருப்பார் என்று மதிப்பிட்டனர்.

சுவிசேஷ செய்தியை மேன்மைப்படுத்த, ஒரு புத்துணர்வூட்டும் வாய்ப்பு இத்தீவில் கொடுக்கப்பட்டது. அந்த தீவின்ஆளுனராக இருந்தவரின் தந்தை நோய்வாய்ப்பட்டிருந்தார். அவர் பவுலால் அற்புதமாக குணப்படுத்தப்பட்டதோடு, அத்தீவில் உள்ள ஜனங்கள் அநேகரும் குணமடைந்தனர். அப்போஸ்தலர் கப்பற்பிரயாணத்தின்போது, சுவிசேஷசெய்தியை தன்னுடன் பிரயாணம் செய்தவர்களிடத்திலோ, தீவிலுள்ள ஜனங்களிடத்திலோ பிரசங்கிக்க முயற்சித்ததாக நமக்கு எந்த தகவலும் கிடைக்காதபோதிலும், இவ்வாறு கிறிஸ்துவைப்பற்றிய அறிவும், அவரது ஊழியக்காரனைக் குறித்தும் ஓரளவு வெளிநாட்டிற்கு செய்தி பரவிற்று. இராஜ்யத்தில் விதையை விதைப்பதற்கு அவர்களை ‘‘நல்ல நிலமாக’’ அப்போஸ்தலர் பவுல் அபிப்பிராயப்படவில்லை என்பது நிரூபணமாகிறது. நம் தேவனாகிய கர்த்தரால், தற்போது அழைக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டுவருகிற மணவாட்டி வகுப்பாருக்குரிய அழைப்பினை இவர்கள் பெற்றிருக்கவில்லை என்பதை அப்போஸ்தலர் சாட்சியகரமாக உணர்ந்திருந்தார். மகிமையடைந்த கிறிஸ்து எல்லா மனுஷரையும் தம்மிடம் சேர்த்துக்கொள்ளும்போது, அப்போஸ்தலர் மூலம் அடைந்த அனுபவங்கள் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றவேளையில் அவர்களுக்கு ஆதாயமளிப்பதாக நிரூபணமாகும்.

‘‘நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்’’ – யோவான் 12:32.

கிரேத்தா கடற்கரைப் பட்டணத்தில் இருக்கும்போது, குளிர்காலத்தில் அங்கேயே தங்கியிருப்பதா அல்லது பிரயாணப்படுவதா என்று ஞானமாக யோசிக்கப்பட்டது. அதில் அப்போஸ்தலர் கலந்துகொண்டு, பிரயாணத்தைத் தொடர்வது பாதுகாப்பற்றது என்று தனது அபிப்பிராயத்தைக் கூறினார். இது சில தெய்வீக ஊக்கத்தினால் உண்டானதாயிருக்கக்கூடும். அல்லது தட்பவெப்பநிலையைக்குறித்த தம் சொந்த நிதானிப்பின் விளைவாக இது ஏற்பட்டிருக்கக்கூடும். பேரிடர்களைக் குறித்தஅனுபவங்களை அவர் ஏற்கனவே அதிகம் அடைந்திருந்தார் என்பதையும் தம் நிருபங்களில் நமக்கு அறிவுறுத்தி எழுதியிருக்கிறார்;

''... மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்''(2கொரி11:25). அத்துடன் கப்பற் பாய் செய்யும் தொழிலில் அநேக கப்பல் மாலுமிகளோடு தொடர்புகொள்ள வாய்ப்புக்கள் கிடைத்தது. மேலும் அத்தொழில் பற்றிய எல்லா விஷயங்களிலும் ஆர்வம் ஏற்பட்டது. அதிகாரத்தில் இருந்தவர்கள் பிரயாணத்தை தொடர தீர்மானித்திருந்தபோதிலும், நமது பாடத்தில் காண்கிறபடி பெரும் சேதம் விளைவிக்கும் புயலை எதிர்கொள்ள நேரிட்டது. அந்த 14 நாட்களும் கர்த்தருடைய பராமரிப்பின்மேல் ஐயப்படவும், பயப்படக்கூடிய சந்தர்ப்பங்களையும் அபரிதமாக அப்போஸ்தலர் அடைந்திருப்பார் மேலும் புயல் ஏற்பட்ட 13ம்தேதி இரவில், கர்த்தர் தம் தூதனை அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பி; அவர் பயப்படக்கூடாது என்ற தேற்றுதலின் செய்தியை அளித்தார்; 'பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்கு தயவு பண்ணினார் என்றான்'' (அப் 27:24). இந்த பரீட்சையின் நாட்களில், தேவனிடத்தில் மனப்பூர்வமாக விசுவாசத்தில் உண்மையாய் நிலைத்திருந்தார். ஆகவே இதன் முடிவில், தூதனால் கொடுக்கப்பட்ட செய்தி உற்சாகப்படுத்துவதாயும், அங்கீகாரத்தை தருவதாயும் அமைந்திருந்தது.

இந்த சம்பவத்திலிருந்து நம் சொந்த நடவடிக்கைகளிலும், நமது தற்காலிகத் தேவைகளிலும் அவருக்கான நமது ஊழியத்திலும் அவர் நிமித்தமாகவும், கர்த்தர் இரகசியமான வழிகளில் நம்மை நடத்திவருகிறார் என்ற ஒரு நல்ல பாடத்தைக் கற்கிறோம். இதோடுகூட, நம் எல்லா ஆவிக்குரிய பரீட்சைகளிலும் சோதனைகளிலும் இப்பாடத்தை பொருத்திப் பார்க்கமுடியும். உதாரணமாக, குறுகலான பாதையில் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிற எல்லாருக்கும், கர்த்தர் அவரது அன்பு மற்றும் அக்கறையை நம்மேல் காண்பிப்பதாக வாக்களித்திருக்கிறார். ஆனால் இதற்கிடையில் சாத்தான் சோதனைகளையும் பல்வேறுவகையான கடினங்களையும் புயல்களாக நம்மேல் வரும்படி அனுமதிக்கக்கூடும். நம்மை அழித்துவிடுமளவு இவை பயமுறுத்தக்கூடும். நமது ஆவிக்குரிய வாழ்க்கையை விழுங்கும்படி அச்சுறுத்தக்கூடும். நமது எதிராளியின் கர்ச்சனைகளும், இடிமுழக்கமும் நமது நம்பிக்கைகளின் மேகத்தை இருளாக்கக்கூடும். இப்படிப்பட்ட பல்வேறு பயங்கரமான நிலைமைகளால் நம்முடைய விசுவாசக் கண்ணிலுள்ள ஒளி குன்றாமல் பார்த்துக்கொள்வதே நமது கடமையாகும். வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற தேவன், அதை நிறைவேற்ற வல்லவராயுமிருக்கிறபடியால் நம் இருதயங்கள் அவர்மேல் ஸ்திரமாக பொருந்தியிருக்கச் செய்யவேண்டும்.

வாழ்வில் புயல்கள் மிக பலமாக மோதும்போது  
கடலிலும் நிலத்திலும் மூர்க்கமான புயல்கள்  
நான் அடைக்கலப்பட்டணத்தைத் தேடுவேன்– தஞ்சமடைய  
தேவ கரத்தின் நிழலிலிருந்து.  
எதிரிகள் காயப்படுத்த போராடலாம்  
சாத்தான் தன் எல்லா தந்திரங்களையும் வலையாய் விரிக்கலாம்  
எனக்கு தீங்கு விளைவிப்பதாக தோன்றுவதை தேவன் மாற்றுவார் –  
நித்திய மகிழ்ச்சிக்கென்று

''இதோ, உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார்'' என்ற வார்த்தைகள் மிகவும் அர்த்தமுடையவை. சோதோமுக்காக ஜெபம்பண்ணின ஆபிரகாமை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. ஒருவேளை, அங்கே ஐந்து நீதிமான்கள் இருந்தால், அந்தப் பட்டணத்தை காப்பாற்றுவதாக தேவன் ஒப்புக்கொண்டார். இந்த வார்த்தைகளில் தேவனுடைய தந்தைக்குரிய ஸ்தானமோ, மனுஷருடைய சகோதர ஸ்தானமோ இங்கு யோசனை அளிக்கப்படவில்லை. திடீரென ஏற்படும் மனத்தூண்டுதல் காரணமாக போலி போதனை தற்போது அநேகரால் பரிந்துபேசப்படுகிறது. அதற்கு மாறாக, அங்கு கூறும் கருத்து என்னவெனில், அந்த கப்பலில் தேவனோடு தனிப்பட்ட வகையில் உறவுகொண்டிருந்தவர் ஒருவரே. மற்றவர்களோ அவர்களது சுபாவ குணநலன்கள் எப்படியிருந்தபோதிலும், ஒருபோதும் பிதாவோடு தனிப்பட்ட உறவுக்குள் வந்திருக்கவில்லை. அந்த வார்த்தைகளிலிருந்து வெளிப்படும் மற்றுமொரு கருத்து என்னவெனில், தெய்வீக பராமரிப்பு பரிசுத்தவான்களோடேகூட செல்கிறது. இதன் காரணமாக, அவர்களுடன் பயணிக்கும் மற்றவர்களுக்கும் மாபெரும் ஆசீர்வாதம் வந்துசேருவது நிரூபணமாகும். இவ்விஷயத்தில் அவர்கள் உலகின் ஜனங்களாக அல்லது

ஆவிக்குரிய புத்துணர்ச்சியை அடையாதவர்களாக இருந்தபோதிலும் ஆசீர்வதிக்கப்படுவர். குறிப்பாக, தேவனுடைய ஜனங்களின் பூமிக்குரிய குடும்பங்களுக்கும் இந்தக் கருத்து பொருந்தும். தேவனுக்கென்று தன்னை தத்தம் செய்த விசுவாசி – தகப்பனோ அல்லது தாயோ தெய்வீக பராமரிப்பின் நேரடி கண்காணிப்புக்கு உட்பட்டிருக்கிறார். தூதர்களைக்குறித்தோ இவ்வாறு எழுதப்பட்டுள்ளது;

"இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா ?" –எபி1:14. அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளாகிய இவர்களுக்குப் பணிவிடைசெய்யும்போது, இவர்களுடைய குடும்பத்தாரும் கர்த்தரோடு முழு உறவுக்குள் வந்திராதபோதிலும், ஓரளவு பாதுகாப்பை அடைகிறார்கள். அப்போஸ்தலர் வேறொரு இடத்தில் குறிப்பிட்டுக் காண்பிக்கிறபடி, விசுவாசியாகிய மனைவி தன் கணவன்மேல் ஆசீர்வாதத்தின் செல்வாக்கை பெறுகிறாள் அல்லது விசுவாசிக்கும் கணவன், தன் மனைவிமேல் தயையுள்ள செல்வாக்கை அடைகிறாள். "அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறாள், அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள்; இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே. இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன(1கொரிந்7:14). தெய்வீகப் பராமரிப்பைக் குறித்த மற்றுமொரு உதாரணமாக, பரிசுத்தவான்களுக்கு விசேஷமாக இப்பராமரிப்பு கொடுக்கப்பட்டபோதிலும், எல்லாவகைகளிலும் அவர்களது நலன் பாதுகாக்கப்படுகிறது. இது அவர்களது பூமிக்குரிய மேம்பாட்டுக்கோ வளமைக்கோ விபத்திலிருந்தும் , கப்பல் கவிழ்வதிலிருந்தும் பாதுகாக்கப்படுவோம் என்ற வாக்குறுதியோ தரப்படவில்லை. பவுலின் விஷயத்தில் நடந்ததுபோலவே, இது எப்பொழுதும் பொருந்தக்கூடியது. கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது – ரோம 8:28. இவர்களோடுகூட அருகாமையிலும், நேசத்தோடும் பழகுகிற அனைவரும் பரிசுத்தவான்களது நலனிலும், தெய்வீகப் பராமரிப்பிலும் ஓரளவு பங்கேற்பார்கள்.

கப்பலிலுள்ள அனைவரும் பாதுகாப்புடன் இருக்கிறார்கள் என்ற நிச்சயத்தை அடைந்தபிறகு, அப்போஸ்தலர் தம் விசுவாசத்தை கப்பலில் உள்ளோர்க்கு கர்த்தரது வார்த்தை தேவதூதனால் அருளப்பட்டதை வெளிப்படுத்தி, அதனால் தாம் திடமனது அடைந்ததையும், நோன்பை முடித்து, போஜனம் பண்ணினதையும், அவ்வாறே அவர்களனைவரும் தைரியமடைந்து, போஜனம்பண்ணும்படி ஆலோசனை கூறினார். அவரது உற்சாகமடைந்த சிந்தை மற்றவர்களுக்கும் பரவினது, அவர்கள் அனைவரும் திடமனதும், தெளிவும் அடைந்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை. அப்போஸ்தலர் அவர்களை திடப்படுத்தி, கவனத்தை ஈர்த்ததோடு மட்டுமல்லாமல், தம் ஆலோசனையை பின்பற்றாததே இந்த பேரிடர் இவர்கள்மேல் வர காரணமாயிற்று என்றும், அதோடுகூட, இவ்விஷயத்தில் தேவனுடைய விசேஷித்த தயவு அவரிடமிருந்ததால், இறுதியில் மீட்கப்படுவோம் என்ற அறிவையும் அடைந்ததாகக் கூறினார். அவ்வாறே நம்மிடையேயும் இருக்கவேண்டும். நாம் அறிந்திருக்கிற நன்மையானவற்றை, நம்மை தேற்றுகின்ற அல்லது புத்துணர்சசியூட்டுகின்ற காரியங்கள் எதுவாயினும் மற்றவர்களுக்கு நாம் பகிர்ந்தளிக்கவேண்டும். நற்செய்தியை அப்போஸ்தலர் தமக்கு மட்டுமே வைத்துக்கொண்டாரா ? அப்படியானால் இது ஒரிரு காரியங்களை நமக்கு குறிப்பாகச் சுட்டிக்காட்டுகின்றது. அதன் நிறைவேறுதல்களில் அவருக்கு விசுவாசமில்லை அல்லது, அவர் சுயநலத்தோடு இருந்தார் என்று பொருள்படும். ஆனால் கர்த்தரின் ஆவியாகிய தயாளகுணத்தை அவர் பெற்றிருந்ததோடு, கர்த்தரிடத்தில் பெருமளவு நம்பிக்கை வைத்திருந்தார். அவர், வரவிருக்கின்ற மீட்பை அறிவிக்க தயக்கம் காண்பிக்கவில்லை. இந்த அறிவை தமக்குரியதென்று உரிமை பாராட்டாமல், இதை ஒரு வெளிப்படுத்தலாக மதிப்பீடு செய்ததன்மூலம் தேவனை மகிமைப்படுத்தினார். சிறைக்கைதியாகிய இவர், படைவீரர்கள் அநேகரிடத்திலும், கப்பல் மாலுமிகளிடத்திலும் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தினார் என்பதில் ஐயமில்லை. அப்போஸ்தலரது இந்த ஞானமும், நேரியதுமான நடக்கையானது, 276 உடன் பயணிகளில் சிலர் பேரிலாவது தாக்கத்தை ஏற்படுத்தி வருங்காலத்தில் கர்த்தரிடம் சிலரை வரவழைக்க சாத்தியமேயில்லை என்று யாரால் கூறமுடியும் ?. அவ்வாறே நம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டும். நாம் பெற்றிருக்கிற சிறந்த செய்திகளை மற்றவர்களுக்கு சொல்ல விரைவாய் செயல்படவேண்டும். வாழ்க்கையின் பல்வேறு சோதனைகளால் பாரஞ்சுமந்து தவிக்கிற சிருஷ்டிப்புக்கள்பேரில் இரங்கி, வரவிருக்கின்ற இராஜ்யத்தின் வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் எடுத்துரைத்து, அவை பூமியின் குடும்பங்கள் அனைத்திற்கும் உரியதாகும் என்று எடுத்துச்சொல்ல நம்மை ஏவவேண்டும். ஒவ்வொரு பொருத்தமான வாய்ப்பை பயன்படுத்தி, அனுதினமும் யாரெல்லாம் பறைசாற்றாதிருக்கிறார்களோ, அவர்கள் அறிவில் குறைவுபட்டிருப்பதையோ அல்லது வெளிப்படுத்தின செய்தியில் விசுவாசமற்றிருப்பதையோ அல்லது சுயநலத்தின்பொருட்டு வெளிப்படுத்தாதிருப்பதையோ நிரூபிக்கிறார்கள். இதை கர்த்தரால் அங்கீகரிக்கமுடியாது. இதே நிலைமையில் நிலைத்திருந்தார்களானால், இராஜ்யத்தின் பங்கைப்பெற முடியாதபடி தடைசெய்யப்படுவார்கள்.

இப்பாடத்தோடு தொடர்புடைய பொருத்தமான மற்றுமொரு கருத்து என்னவெனில், மீண்டும்

புத்துயிர்அளிக்கும் ஆராதனை முறையை கப்பலில் நடத்த ஆலோசனை தரப்படவில்லை. பவுல் அல்லது லூக்கா அல்லது அரிஸ்டாகஸ் இவர்களது ஜீவியம் ஜீவனுள்ள நிருபமாக இருந்ததால் , இவர்களில் எவரேனும் சிறிதளவு முயற்சிகூட எடுக்கவில்லை, கப்பலில் மத ஆராதனைகள் அனுமதிக்கப்பட்டிருந்ததில்லை. ஆயினும் அப்போஸ்தலரது பொதுவான நடக்கையின் வழிமுறைப்படி, அவர் மனுஷரை மீன்பிடிப்பவராக இருந்து, வேறுபட்ட வகுப்பாராகிய மனுஷரைப் பிடித்தார். நாம் விஷயத்தை புரிந்திருக்கிறபடி, அந்நாளிலிருந்த கடல்மனுஷர், முரட்டாட்டமும் அறியாமையுமுள்ள வகுப்பாராக இருந்தனர். தம்முடன் பிரயாணித்தோரில் கேட்க செவியுடையோரை அவர் கண்டிருந்தாரானால், மகிழ்ச்சியுடன் ஊழியம்செய்திருப்பார் என்பதில் நாம் ஐயப்படமுடியாது.

நம் போதகரின் வார்த்தைகளின்படி, ‘‘கேட்க செவியுள்ளவன் கேட்கக்கடவன்’’. இப்பாடத்திலிருந்து பயணிகள் சுவிசேஷத்தைக் கேட்கவோ, பாராட்டக்கூடிய நிலையிலோ இல்லை என்பது தெளிவாக தெரியவருகிறது. ஏனெனில் அவர்கள் தயாராக இருந்த ஒரே சிறுபடகை உபயோகப்படுத்தி, தப்பிக்கமுயலும் சுயநலத்தை நோக்கமாகக்கொண்டு இருந்தனர். மேலும் முன்கூட்டியே ஆலோசித்து, படைவீரர்களையும் சிறைக்கைதிகளையும் கப்பலிலேயே விட்டுவிட்டனர். தேவனுடைய ஆவியால் ஜெனிப்பிக்கப்பட்ட எவரிடையேயும் சுயநலத்தின் ஆவி தகுதிக்கேற்றதாயிராது என்பதை குறிப்பிட்டுக் காண்பிக்கிறோம். இதற்கு எதிரிடையாக, அப்போஸ்தலரது பெருந்தன்மையுள்ள, அன்புள்ள, பிறரை குறித்து சிந்திக்கக்கூடிய ஆவியை நாம் அடையவேண்டும். பொதுவாகவே படைவீரர்களாகிய வகுப்பார் கேட்கும் செவியை பெற்றிருக்கமாட்டார்கள் என்று இதற்கொத்த பரீட்சை நமக்கு காண்பிக்கிறது. ஏனெனில் கப்பல் துண்டுதுண்டாக சிதறிவிடும் என்று உணர்ந்தவுடன், சில சிறைக்கைதிகள் தப்பிவிடநேரிடும் என்று கண்டு, அவர்களை கொன்றுபோடும்படி ஆலோசனை பெற்றிருந்தார்கள். வரையறையின்றி இயங்கும் இருதயம் பெருந்தன்மையானவற்றை உருவாக்கும். மேலும் கர்த்தரோடு உடன்படிக்கையின் உறவிலுள்ள ஜனங்கள் எல்லோரும் ஒழுக்கமுள்ள மனதூண்டுதல்களை அடையவேண்டும். ஏனெனில் அவர்கள் கர்த்தருடையவர்கள். அவருடைய கிருபையை ருசிபார்த்திருக்கிறவர்கள், இதனால் அவரது ஆவியில் பங்குபெற்றிருப்பதோடுகூட, இந்த ஆவி அவர்களுக்குள் தங்கி தாபரிப்பதை அவர்கள் காணவேண்டும். அவர்களிடத்தில் முறையாக வந்து சேருகிற நேரிய மனத்தூண்டுதல்களை நசுக்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கு மாறாக, அவற்றை ஆதரித்துப் பேணுபவர்களாக, அவற்றிற்கு உற்சாகமூட்டுபவர்களாக இருந்து, அதிகதிகமாக அவற்றை வளரச் செய்யவேண்டும். இப்படியாக நாம் கற்றுக்கொள்ளும் காரியங்களுக்கு கீழ்ப்படிவதனால், அறிவில் வளர்வதுபோல் கிருபையிலும் வளர்வோம்.

இந்த அனுபவங்களால் நூற்றுக்கதிபதி மட்டுமே அனுகூலம் அடைந்ததாக காணப்படுகிறது. அவர் மட்டுமே ஆதாயமடையும்படி அப்போஸ்தலரது ஜீவனுள்ள நிருபத்தை படித்திருந்ததாகவும், அவரிடத்தில் மட்டுமே இது ஆழமாக பதிந்ததாகவும் தோன்றுகிறது. மரணத்துக்கு பாத்திரராகிய கலகக்காரராகிய மற்ற சிறைக்கைதிகளைக் கொல்ல போர்ச்சேவகர் யோசனையாயிருந்தபோது, அவர்களுடைய யோசனையைத் தடுத்தார். ஏனெனில் பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்ததாலேயாகும். ஆகவே பவுலின் நிமித்தமாக, மற்ற சிறைக்கைதிகளது ஜீவன்கள் காக்கப்பட்டன.

பவுலோடுகூட யாத்திரைசெய்கின்ற கப்பல்கூட்டத்தாரது ஜீவன்கள் உன்னிமித்தம் பாதுகாக்கப்படும் என்று கர்த்தருடைய வாக்குறுதியை அப்போஸ்தலர் அறிந்திருந்து, அந்த வாக்குறுதியோடு இசைந்து நடக்க எல்லா முறையான ஜாக்கிரதையையும் உபயோகிக்கவேண்டும் என்று அவர் புரிந்துகொண்டார். இதன் காரணமாக, கப்பல் மாலுமிகள் பயணிகளை விட்டுவிட்டு, சிறு படகின்மூலம் தப்பிக்க நோக்கமாயிருப்பதை அவர் கண்டறிந்தபொழுது, அவர்களின்றி, கப்பலை செலுத்தமுடியாது என்றறிந்து இவ்வுண்மைகளை நூற்றுக்கதிபதியிடம் கூறினார். தெய்வீக வாக்குத்தத்தம் நிறைவேறுவதை உறுதிசெய்ய புத்தியுள்ள முன்எச்சரிப்புக்களை எடுப்பதன் அவசியத்தை அவரிடம் பவுல் சுட்டிக்காட்டினார். அவ்வாறே நாம் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டியது என்னவெனில்,தேவனுடைய கிருபையுள்ள வாக்குத்தத்தங்கள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளதை தெளிவாக உணர்ந்துகொள்ள, நாம் ஏதாகிலும் செய்தாகவேண்டும். தற்காலஜீவிய நடவடிக்கைகளோடு தொடர்புடையவற்றில் நமக்கு அப்பமும் தண்ணீரும் நிச்சயமாக கிடைக்குமென்று அவர் வாக்குறுதி அளித்திருக்கிறார். ஆனால் இவைகளைப் பெற்றுக்கொள்ள புத்தியுள்ள வாய்ப்புக்கள் வந்தால் அவைகளை அலட்சியப்படுத்தவேண்டும் என்பது இதற்கு அர்த்தமல்ல. இராஜ்யத்தில் பங்குபெறும் வாய்ப்பை அவர் நமக்கு வாக்களித்திருக்கிறார். ஆனால் நம் அழைப்பையும் நமது தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்குவது நமது கையிலிருக்கிறது. ஒவ்வொரு விஷயத்தோடு தொடர்புடையனவற்றை செய்துமுடிக்க தேவன் முற்றிலுமாக ஆற்றல் வாய்ந்தவராயும், முழு சித்தமுள்ளவராயும் இருக்கிறார். ஆனால் நாம் ஆதாயமடையும்பொருட்டு, எல்லா புத்தியுள்ள வழிகளிலும் அவரோடுகூட இசைந்து செல்வதன்மூலம் நமது விசுவாசத்தை நமது கிரியைகள்மூலம் காண்பிக்க நம்மை அழைக்கிறார். நாம் அற்புதங்களை நிகழ்த்தவேண்டும் என்று நம்மிடம் அவர் எதிர்பார்ப்பதில்லை. தற்கால காரியங்களிலும், நித்திய காரியங்களிலும் நம்மால் முடிந்தஅளவுக்கு செய்ய நம்மிடம் எதிர்பார்க்கிறார். அப்போஸ்தலரது முன்கணிப்பின்படி,

காரியங்கள் படிப்படியாக நிறைவேறினபிறகு, கப்பலிலிருந்த முழு கூட்டத்தாரும், இதில் நீச்சல் அடித்தும் மற்றவர்களோ உடைந்த மரப்பலகைகளைப்பிடித்து மிதந்தும் கரை சேர்ந்தனர். இங்கு நாம் கவனிக்கவேண்டியது என்னவெனில், கரைசேர்ந்தவுடன் உயிர்பிழைத்ததற்காக பொதுவானஆராதனை செய்யலாம் என்று அப்போஸ்தலர் ஆலோசனை ஏதும் முன்வைக்கவில்லை என்பதை நாம் கவனிக்கிறோம். மனிதரது சிந்தைகளை கிளர்ச்சியூட்ட அவர் விரும்பாமல், போதகர் தனக்குக் கற்றுக்கொடுத்த அதே சுவிசேஷ வழிமுறைகளின்படி செய்யவே விரும்பினார். அதன்படி; சீஷத்துவத்தின் விலை என்னஎன்று செல்லும் செலவை முதலாவது கணக்கிட "வாருங்கள் வழக்காடுவோம்". விலைகொடுக்க மனதாயிருந்தால், "வாருங்கள், சிலுவையை சுமந்து என்னைப் பின்பற்றுங்கள்" . உலகிலிருந்து தம் ஜனங்களை ஒன்றுசேர்ப்பதற்கான கர்த்தரது வழிமுறை இவ்வாறு இருக்கும்போது, இன்னும் இதையே பின்பற்றி வந்திருப்பார்களானால், பெயர்கிறிஸ்துவர்களில் மிகமிகசிலரே இருந்திருப்பர். ஆனால் அங்கே உண்மையுள்ளவர்கள் கொஞ்சம்பேர்கூட இல்லை என்று நாம் நம்புகிறோம். உலகை சீர்ப்படுத்த ஏற்றவேளை இன்னும் வரவில்லை. ஆகவே நம் போதகரது ஜெபத்தில் கூறிய வார்த்தைகளாவன;

"நான் உலகிற்காக வேண்டிக்கொள்ளவில்லை; உலகிலிருந்து நீர் எனக்குக் கொடுத்தவர்களுக்காக வேண்டுகிறேன்; (இறுதியாக, ஏற்றவேளையில்) அவர்கள் அனைவரும் ஒன்றாயிருக்கும்படிக்கும்..நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும்.." ராஜ்யத்துக்காக தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரை ஒன்றுசேர்த்தலானது, சாதகமற்ற சூழ்நிலையின்கீழ் நடைபெறுவதன்மூலம் அவர்கள் முற்றிலும் பரீட்சைக்குட்படுத்தப்படுவார்கள். வெகுசிலரே தங்கள் வழியை குறுகலானதாக ஏற்படுத்திக்கொண்டு இப்பாதையை கண்டுகொள்வர். இன்னும் வெகுசிலரே அதில் வளர்ச்சியடைவர். உலகத்தோடு தொடர்புகொள்ள தேவனது ஏற்றவேளை வரும்போது, பூமிக்குரிய மற்றும் பரலோகத்துக்குரிய வல்லமைகள், மகிமையடைந்த திருச்சபையோடு இசைவாக இணைந்து, சுவிசேஷத்தை எளிமையாக்குவர். இதனால் புத்தியீனனும், வழிப்போக்கனும் தவறுசெய்யவேண்டிய நிலை அங்கே எழாது.

இதுவரை பதிவேடு காண்பிக்கிறபடி, கப்பல் விபத்துக்குள்ளாகி, அப்போஸ்தலரும் அவரது கூட்டத்தாரும் நாகரீகமற்றவர்கள் வாழும்ஒரு தீவில் கரைஏறினபோது, அந்த பனிக்காலத்தில் அவர்களிடத்திலோ அல்லது கப்பலிலிருந்த போர்வீரர்களிடமோ, அல்லது அவரோடு பயணித்தவர்களிடமோ அல்லது கப்பல் மாலுமிகளிடத்திலோ சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் எந்த ஊழியமும் செய்யவில்லை. அங்கே சபையை ஸ்தாபிக்கவில்லை. அவர்கள் அங்கே கேட்கும் செவியுடையோரையே கண்டடையவில்லை என்று நாம் தெளிவாக அனுமானிக்கிறேம். உலகத்தை மனமாற்ற நாம் எதிர்பார்க்கக்கூடாது. அவ்வகைப்பட்ட எக்காரியத்திலும் ஈடுபடக்கூடாது என்பதை இதிலிருந்து பாடமாக நாம் கற்கிறோம். தெரிந்தெடுக்கப்பட்ட சபை நிறைவடைவதற்கு போதுமான எண்ணிக்கையை கர்த்தர் சத்தியத்தின்மூலம் கண்டடைவார் என்று நாம் எதிர்பார்க்கவேண்டும், பின்பு இராஜ்யத்தின் அதிகாரத்திலும் வல்லமையிலும் ஸ்தாபிக்கப்படும் நீதியானது, அவரைஅறிகிற அறிவை அடையக் காரணமாகி, முழுஉலகையும் நிரப்புவதோடு, முழு உலகும் சபைமூலமாக ஆசீர்வாதமும் அடையும் –கலாத் 3:29.

———————————